செ.வெ.எண்: 935 நாள்:07.12.2017

# கன்னியாகுமரி மாவட்டம்
# ஒகி புயலினால் காணாமல் போன மீனவர்களில் மாகாராஷ்டிரா, குஜராத் ,லட்சதீவு ,கருநாடக மற்றும் கேரள மாநில கடலோர பகுதிகளில் கரை சேர்ந்த மீனவர்கள் பட்டியல் வெளியீடு.

-------

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலினால் காணாமல் போன மீனவர்கள் பட்டியலை இன்று (07.12.2017) கண்காணிப்பு அலுவலர் மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை செயலாளர் திரு.டி.கே.ராமச்சந்திரன்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலுக்கு ஒரு நாள் முன்பாக 284 படகுகளில் கடலுக்கு மீன் பிடிக்க சென்றதாக கண்டறியப்பட்டுள்ளது. இதில் கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த 249 படகுகளில் ஆழ்கடல் மீன்பிடிப்பதற்கு சென்ற 1969 மீனவர்கள் தற்போது மாகாராஷ்டிரா, குஜராத் லட்சதீவு கருநாடக மற்றும் கேரள மாநில கடலோர பகுதிகளில் கரை சேர்ந்தவுள்ளனர். கரை சேர்ந்த மீனவர்கள் மீன்வளத்துறை அலுவலர்கள் மூலமாக அந்தந்த மாநிலங்களில் பாதுகாப்பாக உள்ளனர். மீனவர்களின் பெயர், படகு எண் போன்ற விபரங்கள் சேகரிக்கப்பட்டு இன்று மீன்வளத்துறையின் மூலம் பட்டியல் வெளியீடு செய்யப்பட்டது.

இதில் கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த மீனவர்களில் மாஹாராஷ்டிரா மாநில கடற்கரையில் (DEVGAD) டியோகர் பகுதியில் 61 படகுகளில் பயணம் செய்த 498 மீனவர்களும், (RATNAGIRI) ரத்னகிரி பகுதியில் 23 படகுகளில் பயணம் செய்த 267 மீனவர்களும் கரை சேர்ந்து உள்ளனர். இதை போல் லட்சதீவு கடலோர பகுதிகளில் (KALPENI) கல்பேனி, (ANDROTT) அன்ரோட், ((KILTAN) கில்டான், (AGATI) அகட்டி (BITRA) பிட்ரா (KADAMAT) கடாமெட் (KAVARATTI) கவரட்டி (CHETLAT) சிட்லாட் ஆகிய கடலோர பகுதிகளில் 12 படகை சார்ந்த 143 மீனவர்களும், கருநாடக மாநில பகுதியில் உள்ள (KARWAR) கார்வார் பகுதியில் 38 படகுகளை சார்ந்த 310 மீனவர்களும், (MALPE)

மல்பி பகுதியில் 98 படகுகளை சார்ந்த 665 மீனவர்களும், குஜராத் மாநிலத்தில் உள்ள (VERAVAL) வெராவல் பகுதியில் 8 படகுகளை சார்ந்த 46 மீனவர்களும், கேரள மாநிலத்தில் உள்ள் கொச்சின் பகுதியில் 5 படகுகளை சார்ந்த 16 மீனவர்களும், விழிஞ்சம் பகுதிகளில் 3 படகுகளை சார்ந்த 19 மீனவர்களும் (MUNAMBAM) முனம்பம் பகுதியில் 1 படகை சார்ந்த 5 மீனவர்களும் ஆக மொத்தம் 249 படகுகளை சார்ந்த 1969 மீனவர்கள் பாதுகாப்பாக இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட 5 மாநிலங்களில் கடற்கரை பகுதிகளில் கரை சேர்ந்துள்ள இம்மீனவர்களுக்கு மீன்வளத்துறை அலுவலர்கள் மூலம் அடிப்படை வசதிகள் மற்றும் படகுகளுக்கான எரிப்பொருள் வசதி செய்து கொடுத்து பாதுகாப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்து சேர்வதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குஜராத் மாநிலத்திற்கு திரு.சந்திரகாந்த் பி.காம்பிளே,இ.ஆ.ப., அவர்களையும் கருநாடக மாநிலத்திற்கு டாக்டர் சந்தோஷ் பாபு,இ.ஆ.ப., அவர்களையும் மாஹாராஷ்டிரா மாநிலத்திற்கு திரு. ஷம்பு கல்லோலிகர்,இ.ஆ.ப., அவர்களையும் கேரளா மாநிலத்திற்கு திரு.அருண்ராய்,இ.ஆ.ப., அவர்களையும், லட்சதீவுக்கு திரு.எ.ஜான்லூயிஸ்,இ.ஆ.ப., அவர்களையும் நியமிக்கப்பட்டு அவர்கள் அந்தந்த பகுதிகளுக்கு நேரில் சென்று மீனவர்கள் குறித்த முழு விவரங்களையும் பெற்று பாதுகாப்பாக அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் கூடுதல் காண்காணிப்பு அலுவலர் திரு.டி.ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப வேலைவாய்ப்பு பயிற்சித்துறை இயக்குநர் திருமதி.பி.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., மீன்வளத்துறை இயக்குநர் திருவி.பி..தண்டபாணி, இ.ஆ.ப., மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர் திரு.சமீரன்,இ.ஆ.ப., கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கன்னியாகுமரி மாவட்டம்.